



## பெற்றோர்களுக்கான தகவல்

# பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம்

**உங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல ஆரம்பத்தை நீங்கள் வழங்குவதற்கு உதவக்கூடிய ஆதரவையும் சேவைகளையும் பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம் (Brighter Futures) உங்களுக்கு வழங்குகிறது. குடும்பப் பிரச்சினைகள் இன்னும் மோசமான நிலைக்குச் செல்வதை இது தடுக்க முடியும்.**

## இத் திட்டம் எனது குடும்பத்திற்குப் பொருந்துமா?

பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம், எட்டு அல்லது அதிலும் குறைந்த வயதையுடைய பிள்ளைகளைக் கொண்ட அல்லது ஒரு குழந்தையை எதிர்பார்த்திருக்கும் குடும்பங்களுக்குரியதாகும்.

குடும்பத்திலிருந்தும், நண்பர்களிடமிருந்தும் உங்களுக்கு ஆதரவு கிடைக்காகததுடன் பிள்ளைப் பராமரிப்பு உங்களுக்குக் கடினமானதாக இருப்பின் உங்களால் இத் திட்டத்தில் இணைய இயலலாம்.

போதைப் பொருள் மற்றும் மதுபாவனைப் பிரச்சினைகளையும் மனநல விவகாரங்களையும் எதிர்கொள்ளும் குடும்பங்களும், கற்றலில் குறிப்பிடத்தக்க சிரமங்கள், சிறுவர் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள், குடும்ப வன்முறை என்பவற்றை எதிர்கொள்கின்ற பெற்றோர்களும் அல்லது பெற்றோராயிருப்பதற்கான திறன்களைப்பெற உதவி தேவைப்படுவோரும் இத்திட்டத்தில் பங்குபற்ற முடியும்.

## பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் பணியாளர் ஒருவர் மூலம் ஆதரவளிக்கப்படும். அவர் பின்வருவன உட்பட உங்கள் குடும்பத்திற்குகந்த சேவைகளை நீங்கள் பெற உங்களுக்கு உதவுவார்.

### வீட்டுக்கு வருகை தரல்

உங்கள் பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் பணியாளர் உங்கள் சொந்த வீட்டில் தனிமையில் உங்களைச் சந்திக்க முடியும். பிள்ளைகளை வளர்ப்பதில் ஒவ்வொரு பெற்றோரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி நீங்கள் பேசவும் உதவி பெறவும் முடியும்.

### குழந்தை கவனிப்புத் திட்டங்கள்

ஏனைய பெற்றோர்களைச் சந்தித்து உங்கள் பிள்ளைகளின் நடத்தைகளை நெறிப்படுத்துவதற்கு உதவும் வழிவகைகள் பற்றி அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள முடியும்.

### பிள்ளைகளுக்கான தரம்வாய்ந்த சேவைகள்

உங்கள் பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளுடன் சிறுவர் பராமரிப்பகங்களில் அல்லது விளையாட்டு குழுக்களில் விளையாடும்போதும், கற்றுக்கொள்ளும் போதும் தகுதியுள்ள பணியாளர்களால் பராமரிக்கப்பட முடியும்.



*“பிரகாசம்மிக்க எதிர்காலங்கள் பணியாளர் எனது வீட்டுக்கு வருகை தருவதை நான் மிகவும் எதிர்பார்க்கின்றேன். பேசுவதன் மூலம் நான் ஆறுதல் பெறவும் எனது இலக்குகளின் மீது மனதை ஒருமுகப்படுத்தவும் முடிகிறது. நான் தற்போது TAFE- இற்குச் செல்கிறேன். நான் விரும்பும் வேலையைப் பெற இது எனக்கு உதவும். எனது மகன் பாடசாலைக்குச் செல்ல தயாராவதற்குத் தேவையான உதவியைப் பெறுகிறான். அவனால் தற்போது ஏனைய சிறுவர்களுடன் நன்கு விளையாட முடிகிறது. ஒரு நாள் என்னாலும் குடும்ப வன்முறைக்கு ஆட்பட்டுள்ள ஏனைய பெண்களுக்கு உதவிசெய்ய இயலுமென நம்புகிறேன்.”*

brighter futures
A NSW Government
early intervention initiative





## பெற்றோர்களுக்கான தகவல்

# பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம்

## நான் எவ்வாறு இதில் ஈடுபாடுகொள்ளலாம்?

இந்நிகழ்ச்சித்திட்டத்தில் நீங்கள் இரண்டு வழிகளில் ஈடுபாடு கொள்ள இயலும். உங்கள் அனுமதியுடன் ஒரு சமூக முகவர் நிலையம் உங்களைப் பரிந்துரைக்கலாம். அல்லது இத்திட்டத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கு உதவி தேவைப்படுவதாக பரிந்துரைக்கக்கூடிய ஓர் அறிக்கை DoCS தொலைபேசி உதவி இணைப்பினால் பெறப்பட்டிருக்கலாம்.

## நான் இதில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமா?

இல்லை. குடும்பங்கள் பிரகாசம்மிக்க எதிர்காலங்கள் திட்டத்தில் கலந்து கொள்வது அவற்றின் விருப்பத்தினைப் பொறுத்தது. இத்திட்டத்தில் எவ்வளவு காலம் இருப்பதென்பதையும் குடும்பங்களே தீர்மானிப்பதுடன் எவ்வேளையிலும் இதிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

## அடுத்து நடப்பது என்ன?

உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்றும் எம்மால் எவ்வாறு உதவ முடியும் என்றும் நாம் பேசுவோம். உங்கள் குடும்பம் என்று நோக்கும்போது, அதைப்பற்றி நன்கு அறிந்தவர் நீங்களே.

உதவியாக இருக்கும் என நீங்கள் எண்ணுவதாயின், ஏனைய சேவைகள் மற்றும் உங்கள் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் ஆகியோருடனும் எங்களால் பேச முடியும், ஆனால் உங்கள் அனுமதியுடன் மட்டுமே. உங்கள் தனிப்பட்ட இரகசியம் இத் திட்டத்தில் பாதுகாக்கப்படுவதுடன் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளிலும் நீங்கள் பங்கெடுப்பீர்கள்.

கூட்டாக, நாம் ஒரு தொகுதி விடயங்களைத் திட்டமிட்டு உங்களுக்குத் தேவையான சேவைகள் மற்றும் உதவிகளுடன் உங்கள் குடும்பத்தைத் தொடர்புபடுத்துவோம். திட்டம் எவ்வாறு செயற்படுகின்றதென்பதைப் பற்றிப் பேசுவதற்கு நாங்கள் உங்களைச் சந்திப்போம். மாற்றம் ஏதும் ஏற்படுமாயின் வேறுவகையான உதவிகளை எம்மால் ஏற்பாடு செய்ய முடியும்.

## மேலதிகத் தகவல்கள்

பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம் பற்றி மேலதிக விபரங்களை நீங்கள் DoCS- இன் இணையத்தளம் www.community.nsw.gov.au விலிருந்து அல்லது பின்வரும் சமூக முகவர் நிலையத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெறலாம்.



*“ஆரம்பத்தில் DoCS திட்டத்தில் இருப்பதையிட்டு நான் கவலைப்பட்டேன். பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் பணியாளர் என்னை எனது வீட்டில் சந்தித்து இத்திட்டம் பற்றி பேசிய பிறகு அது எனது குடும்பத்திற்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை நான் புரிந்துகொண்டேன். எனது மகனுக்குத் தேவைப்பட்ட சேவைகளை நான் பெற இத்திட்டப் பணியாளர் என்னுடன் இணைந்து செயல்பட்டு உதவினார். தொடர்ந்து கிட்டும் உதவியின் மூலம், தற்போது அவனால் அதிக நம்பிக்கையுடன் பேச இயலுவதுடன் ஆர்வத்துடன் பாடசாலைக்கும் செல்கின்றான். நான் ஒரு பெற்றோர் குழுவில் இணைந்துள்ளேன். எமது பிள்ளைகளுக்கு எவ்வாறு சிறந்த பராமரிப்பை வழங்கலாம் என்பதை நாங்கள் கூட்டாக கற்றுக்கொள்கின்றோம். எதிர்காலம் பற்றிய மிகுந்த ஆர்வமும் நம்பிக்கையும் எனக்கு உள்ளது.”*

DoCS
NSW Department of Community Services

New South Wales Government

இப்பிரசுரத்திலுள்ள நிழற்படங்களில் காணப்படுவோர் உரு மாதிரிகள் மட்டுமே.



ISBN 1 74190 052 2 May 2007